بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *04/09/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் – ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்வின் முழுமையான முன்மாதிரி

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் ஒரு முழுமையான மனிதராக ஆக்கி, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் ஓர் அழகிய முன்மாதிரியாகத் திகழச் செய்ததோடு, அனைத்து நற்பண்புகளையும் அன்னாரிடம் தோற்றுவித்து, அதனை மகத்தான நல்லொழுக்கமாக ஆக்கினான். மேலும் நம்பிக்கையாளர்களிடம், நீங்கள் உங்களுக்குள் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள விரும்புகிறீர்கள் என்றால், நல்லொழுக்கத்தின் உயரிய தரங்களை அடைய விரும்புகிறீர்கள் என்றால், இந்த மகத்தான தூதரைப் பின்பற்றுங்கள்; இதுவே நீங்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கான வழியாக அமையும் என்று அறிவுறுத்தினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நற்பண்பையும் அதன் உச்சக்கட்டத்திற்கு கொண்டு சேர்த்த அதே வேளையில், இத்தகைய உயரிய தரங்களை அடைய முயற்சி செய்யுமாறு நம்பிக்கையாளர்களுக்கும் வலியுறுத்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்தல் (தவக்குல் அலல்லாஹ்) எனும் நற்பண்பும் மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்: "நபியே! நிச்சயமாக நாம் உம்மை உலகிற்கு கண்காணிப்பாளராகவும், நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி கூறுபவராகவும், நிராகரிப்பாளர்களுக்கு (அச்சமூட்டி) எச்சரிப்பவராகவும், அல்லாஹ்வின் கட்டளையுடன் அவன் பக்கம் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் சூரியனாகவும் அனுப்பியுள்ளோம். மேலும், நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மிகப்பெரிய அருள் கிடைக்கும் என்று நற்செய்தி அறிவிப்பீராக. மேலும், நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் நீர் ஒருபோதும் கீழ்ப்படிய வேண்டாம்; அவர்களின் துன்புறுத்தல்களைப் பொருட்படுத்தாது புறக்கணித்து விடுவீராக. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக; பொறுப்பேற்றுச் செயல்படுத்துவதில் அல்லாஹ்வே போதுமானவன் ஆவான்."

இதில் நம்பிக்கையாளர்களுக்கும் ஒரு நற்செய்தி உள்ளது. அவர்கள் ஈமானில் உறுதியாக இருந்து, அல்லாஹ்வின் கட்டளைகளைச் செயல்படுத்துவதோடு, அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையும் வைத்திருப்பார்களேயானால், அல்லாஹ் அவர்களின் ஒவ்வொரு கஷ்டத்திலும் போதுமானவனாக இருப்பான். மற்றோர் இடத்தில், "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை; எனவே, நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்" என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் (வரலாற்று) நிகழ்வுகளைப் பார்க்கும்போது, அன்னார் மிகவும் உயரிய தகுதியுடைய ஒரே நிலைப்பாட்டைக் கடைபிடிக்கக்கூடியவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும், இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்பவராகவும், படைப்பினங்கள் மீது அச்சமும் எதிர்பார்ப்பும் வைப்பதிலிருந்து முற்றிலும் முகந்திருப்பியவராகவும், இறைவன் மீது மட்டுமே முழு நம்பிக்கை வைப்பவராகவும் இருந்தார்கள் என்பது மிகவும் தெளிவாக தெரிகிறது. நபிமார்களின் நிகழ்வுகளில் இத்தகைய அபாயகரமான சந்தர்ப்பங்கள் வந்தபோதிலும், இறைவன் மீது நம்பிக்கை வைத்து, இத்தனை உறுதியோடும் நிலைப்பாட்டோடும் நின்ற எந்தவோர் உதாரணமும் காணக் கிடைப்பதில்லை."

**பிறகு, அன்னார் கூறுகிறார்கள்**: "தபத்துல் تبتل அதாவது இறைவனிடம் உள்ளத்தைப் பிணைத்துக் கொள்வதும், உலகத்தை விட்டுவிடுவதுக்குமான செயல் முன்மாதிரியாக நமது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விளங்குகிறார்கள். அன்னாருக்கு எவருடைய புகழ்ச்சியைப் பற்றியோ அல்லது எவருடைய இகழ்ச்சியைப் பற்றியோ கவலை இருந்ததில்லை. அன்னாருக்கு எண்ணற்ற துன்பங்கள் நேரிட்டன; ஆனால், இறைவன் தரப்பிலிருந்து எந்தப் பணிக்காக அன்னார் வந்தார்களோ, அந்தப் பணியை நிறைவேற்றுவதிலிருந்து எந்தவொரு பேராசையும் சுயநலமும் அன்னாரைத் தடுக்க முடியவில்லை. எவர் 'முதபத்துல்' متبتل ஆக (அதாவது, இறைவன் பக்கம் மனதை திருப்பியவராக) இருக்கிறாரோ, அவரே 'மு(த்)தவக்கில்' متوکل ஆகவும் (இறைவனை முழுமையாக நம்பியவராகவும்) இருப்பார். அதாவது, இறைவனை முழுமையாக நம்பியவராக ஆவதற்கு இறைவன் பக்கம் மனதை திருப்பியவராக மாறுவது நிபந்தனையாகும். மனிதன் மற்றவர்கள் மீது நம்பிக்கையும் சார்பும் வைக்கும் வரை, அல்லாஹ்வின் மீது தூய நம்பிக்கை ஏற்பட முடியாது. மனிதன் இறைவனை நோக்கித் திரும்பும்போது, அவன் உலகத்துடனான பிணைப்பை முறித்துக்கொண்டு இறைவனுடன் தன்னை இணைத்துக் கொள்கிறான். நமது கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் முழுமையான முறையில் இறைவனுடன் உள்ளத்தை இணைத்துக் கொண்டவர்களாக இருந்ததோடு, முழுமையான முறையில் இறைவன் மீது நம்பிக்கை வைப்பவர்களாகவும் இருந்தார்கள்."

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "அல்லாஹ்வை பலவீனமானவன் என்று எண்ணிவிடாதீர்கள்; அவன் பெரும் ஆற்றல் மிக்கவன். ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் அவன் மீது நம்பிக்கை வைத்தால் அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வான். எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன். இறையச்சத்தின் அருள்களில் ஒன்று என்னவென்றால், இறையச்சமுடையோருக்கு மார்க்கக் விஷயங்களுக்கு இடையூறாக இருக்கும் துன்பங்களிலிருந்து அல்லாஹ் (அவர்களுக்கு) விடுதலையளிக்கிறான். அதேபோன்று, இறையச்சமுடையோருக்கு அல்லாஹ் சிறப்பான முறையில் ரிஸ்க் رزق வழங்குகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தபோதிலும் வேதம் கொடுக்கப்பட்டோர், தத்துவஞானிகள், உயரிய கல்வியறிவு கொண்டவர்கள் மற்றும் அறிஞர்கள் நிறைந்த ஒட்டுமொத்த உலகத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும், அன்னாருக்கு ஆன்மிக ரிஸ்க் எந்த அளவு அதிகமாக வழங்கப்பட்டதென்றால், அன்னார் அனைவரையும் மிகைத்து அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டினார்கள்."

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**; **ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நம்ப வேண்டுமோ அந்த அளவுக்கு அவன் மீது நம்பிக்கை வைத்தீர்களேயானால், பறவைகளுக்கு ரிஸ்க் வழங்கப்படுவதைப் போல் நிச்சயமாக உங்களுக்கும் வழங்கப்படும். அவை காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட்டு, மாலையில் வயிறு நிறைந்தவையாகத் திரும்புகின்றன."

**ஹஸ்ரத் அபூஸர்** ابوذر **அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "உலகப்பற்று இல்லாமல் இருப்பது என்பது ஹலாலை ஹராமாக (அனுமதிக்கப்பட்டதை தடுக்கப்பட்டதாக) ஆக்குவதோ அல்லது செல்வத்தை வீணடிப்பதோ அல்ல. மாறாக, உலகப்பற்று இல்லாமல் இருப்பது என்பது, உங்கள் இரு கைகளிலும் இருக்கும் பொருளை விட, அல்லாஹ்வின் கைவசம் உள்ளதன் மீது அதிக நம்பிக்கையை வைப்பதாகும்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதை மனதில்கொண்டவாறு தமது அன்றாட விஷயங்களுக்காகவும் துஆ செய்து வந்தார்கள். **ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டிலிருந்து வெளியேறும்போது, அல்லாஹ்வின் பெயரால், நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறேன். அல்லாஹ்வே! நாங்கள் தவறி(ழைத்து) விழுவதிலிருந்தும் அல்லது வழிதவறி போவதிலிருந்தும், நாங்கள் அநீதி இழைப்பதிலிருந்தும் அல்லது எங்கள் மீது அநீதி இழைக்கப்படுவதிலிருந்தும், நாங்கள் அறியாமையுடன் நடந்து கொள்வதிலிருந்தும் அல்லது எங்களுடன் அறியாமையுடன் நடந்து கொள்ளப்படுவதிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்."

**ஹஸ்ரத் புரைதா** بریدہ **(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டிலிருந்து வெளியே வரும்போது இவ்வாறு கூறுவார்கள்:** "அல்லாஹ்வின் பெயரால், நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறேன்; மேலும், அல்லாஹ்வின் அருளாலேயே நன்மை செய்வதற்கான ஆற்றலும், தீமையிலிருந்து தப்பிப்பதற்கான ஆற்றலும் கிடைக்கிறது. அல்லாஹ்வே! நான் வழிதவறிப்போவதை விட்டும் அல்லது நான் வழிகெடுக்கப்படுவதை விட்டும், நான் தடுமாற்றத்தில் சிக்குவதை விட்டும் அல்லது தடுமாற்றத்தில் நான் சிக்கவைக்கப்படுவதை விட்டும், நான் பிறர் மீது அநீதி இழைப்பதை விட்டும் அல்லது என் மீது அநீதி இழைக்கப்படுவதை விட்டும், நான் அறியாமையுடன் நடப்பதை விட்டும் அல்லது என்னிடம் அறியாமையுடன் நடந்து கொள்ளப்படுவதை விட்டும், நான் பிறர் மீது வரம்பு மீறுவதை விட்டும் அல்லது எனக்கு எதிராக வரம்பு மீறப்படுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்."

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால்(ரலி) அவர்களிடம் வருகை தந்தார்கள். அவர்களிடம் பேரீச்சம்பழங்களின் ஒரு குவியலைக் கண்டு, பிலாலே! இது என்ன என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் பிலால்(ரலி) அவர்கள், இவை தங்களுக்காக நான் சேமித்து வைத்துள்ள சில பேரீச்சம்பழங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார், பிலாலே! மறுமை நாளில் இதன் புகை நரகத்தில் எழும் என்று நீர் அஞ்சவில்லையா? பிலாலே! செலவிடுவீராக; அர்ஷின் அதிபதியிடமிருந்து வறுமை வந்துவிடுமோ என்று அஞ்சாதீர் என்று கூறினார்கள்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "மனிதன் இறைக்கட்டளைப்படி நடந்து, இறைவன் மீது தனக்குள்ள நம்பிக்கையை நிலைநிறுத்தும்

போதுதான் அவனது ஈமானில் முன்னேற்றம் ஏற்படும். கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் பிலால் அவர்களிடம், நாளைய இறைவன் மீது உமக்கு ஈமான் இல்லையா? இன்று உமக்குக் கொடுக்கும் இறைவன் நாளை உமக்குத் தரமாட்டான் என்று உமக்கு நம்பிக்கை இல்லையா என்று கேட்டார்கள். ஆனால் இந்த அறிவுரையின் பொருள், வீண் விரையம் செய்ய வேண்டும் என்பதோ அல்லது வாழ்வாதாரப் பொருட்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யக் கூடாது என்பதோ அல்ல. காரணிகளைப் பயன்படுத்துவதும் அவசியமாகும்; அதேவேளையில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும் வைக்க வேண்டும். இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் பொருள் முன்னெச்சரிக்கையுடன் செயல்படாமலும், காரணிகளைப் பயன்படுத்தாமலும் இருப்பது என்பதல்ல!"

**ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஒருவர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! நான் எனது ஒட்டகத்தின் முழங்காலைக் கட்டிப்போட்டுவிட்டு இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமா அல்லது அதனைக் கட்டிப்போடாமல் விட்டு நம்பிக்கை வைக்க வேண்டுமா என்று கேட்டார். அதற்கு அன்னார், அதன் முழங்காலைக் கட்டிவிட்டு நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பதிலளித்தார்கள்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் பொருள், மனிதன் எவ்வித திட்டமிடலையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பது அல்ல; மாறாக, திட்டமிடலை முழுமையாகச் செய்து முடித்த பிறகு அதன் முடிவை இறைவனிடம் ஒப்படைப்பதாகும்; இதற்கே நம்பிக்கை என்று பெயர். மனிதன் எந்தவொரு திட்டமிடலையும் செய்யாமல், வெறுமனே நம்பிக்கை மட்டும் வைத்தால், அவனது நம்பிக்கை வெறுமையானதாக இருக்கும். இதேபோல், வெறும் திட்டமிடலை மட்டும் செய்துவிட்டு, அதன் மீது மட்டுமே நம்பிக்கை வைத்து இறைவன் மீது நம்பிக்கை இல்லையென்றால், அந்தத் திட்டமிடலும் பயனற்றதாகிவிடும்."

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சில தீனார்கள் வந்தன. அன்னார் அவற்றில் ஆறு தீனார்களைத் தவிர மற்ற அனைத்தையும் பங்கிட்டு வழங்கிவிட்டார்கள்; அந்த ஆறு தீனார்களைத் தமது மனைவியரில் ஒருவரிடம் கொடுத்து வைத்தார்கள். தமது இறுதி நோயின் போது அன்னார் அந்த தீனார்களைப் பற்றிக் கேட்டார்கள். அவை இன்னும் செலவிடப்படவில்லை என்பதை அறிந்ததும், அந்த தீனார்களை எடுத்து வருமாறு கூறினார்கள். அன்னார் அவற்றை எடுத்துத் தமது உள்ளங்கையில் வைத்து எண்ணிப் பார்த்தார்கள்; அவை ஆறு தீனார்களாக இருந்தன. பிறகு அன்னார் கூறுகையில், 'இறைவனைச் சந்திக்கும் போதும் உலகை விட்டுப் பிரியும் போதும் இந்த தீனார்கள் முஹம்மதிடம் இருக்குமேயானால், தமது இறைவன் மீது முஹம்மது வைத்த நம்பிக்கைதான் என்ன?' என்றார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தீனார்கள் அனைத்தையும் அல்லாஹ்வின் வழியில் தர்மம் செய்துவிட்டார்கள்; அன்றைய தினமே அன்னார் மரணமடைந்தார்கள்."

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்**: "அல்லாஹ் நமக்கு எதை விதித்துள்ளானோ, அதைத் தவிர வேறு எதுவும் நம்மை வந்தடையாது; அவனே எங்களது பாதுகாவலன்; நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியில் இறைவன் மீதான நம்பிக்கையின் உயரிய உதாரணம் முஸைலிமா கஸ்ஸாபின் مسیلمہ کذاب நிகழ்விலும் காணக்கிடைக்கிறது. முஸைலிமா கஸ்ஸாப், ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின்

காலத்தில் வந்து, முஹம்மது(ஸல்) தமக்குப் பிறகு என்னை தமது பிரதிநிதியாக ஆக்கினால், நான் அவரைப் பின்பற்றுவேன் என்று கூறினான். அவன் தனது சமூகத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்களுடன் மதீனாவிற்கு வந்திருந்தான். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனிடம் வந்தார்கள்; அன்னாருடன் ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் ثابت بن قیس بن شماس (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் பேரீச்ச மரத்தின் சிறிய கிளை ஒன்று இருந்தது. அன்னார் முஸைலிமாவுக்கு முன்பாக நின்றுகொண்டு அவனிடம், நீர் என்னிடம் இந்த மரக்கிளையைக் கேட்டாலும் கூட இதை நான் உமக்குத் தரமாட்டேன்; இறைவன் உமக்கு எதை விதித்துள்ளானோ அதைத் தாண்டி நீர் ஒருபோதும் செல்ல முடியாது. நீர் புறமுதுகிட்டுச் சென்றால், அல்லாஹ் உமது குதிக்கால் (நரம்பு)களை துண்டித்து விடுவான் என்று கூறினார்கள்.

**இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு எந்தவொரு விஷயத்திலும் உலகத்தின் பக்கமோ, உலக மக்களின் பக்கமோ கவனம் இருந்ததில்லை. மேலும், உலக வழிவகைகளின் பக்கம் அன்னார் ஏறெடுத்தும் பார்த்ததில்லை. மாறாக, ஒவ்வொரு விஷயத்திலும் அன்னாருடைய பார்வை இறைவன் பக்கமே நிலைத்திருந்தது; அவனே அனைத்தையும் செய்வான் என்றிருந்தது. அன்னார் இறைநம்பிக்கையின் ஒரு முழுமையான முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். முஸைலிமா, ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் ஒரு பெரும்படையுடன் மதீனாவிற்கு வந்து, அன்னார் தமக்குக்குப் பிறகு அவனைத் தமது கலீஃபாவாக ஆக்கினால், அவன் தனது சமூகத்துடன் அன்னாரைப் பின்பற்றுவதாகக் கோரிக்கை விடுத்தான். ஆனால், ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் அவனது கோரிக்கையை உடனடியாக நிராகரித்தார்கள். அக்காலத்தில் நிராகரிப்பாளர்களின் ஆதிக்கம் இருந்தது; அன்னாருக்குத் தொல்லைகள் கொடுக்கப்பட்டு வந்தன; கைஸர் மற்றும் கிஸ்ராவின் அதிகாரிகள் கட்டளைகளை அனுப்பிக் கொண்டிருந்தனர்; பனூ ஃகஸ்ஸான் غسان போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்; பல்வேறு அரசாங்கங்களும் இந்தப் புதிய இயக்கத்தைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து வந்தன. இத்தகைய சூழலில் மனித அறிவானது, நண்பர்களையும் எதிரிகளையும் தன்னுடன் இணைத்துக் கொள்ளவே விரும்பும்; ஆனால், ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களின் நம்பிக்கை இறைவன் மீதே இருந்தது. அன்னாருடைய உள்ளம் உறுதியினாலும், நெஞ்சம் ஈமானினாலும் நிறைந்திருந்தது. முஸைலிமாவையும் அவனது படையையும் நம்புவதை ஒரு கணமும் அன்னார் பொருத்தமானதாகக் கருதவில்லை; பேரீச்ச மரத்தின் ஒரு கிளைக்கு ஈடாக அவனது ஆதரவைப் பெற வேண்டியிருந்தாலும்கூட, அதை நான் ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன் எனத் தெளிவாகக் கூறிவிட்டார்கள். இந்த நிகழ்விலிருந்து, அன்னாருடைய மறுப்பானது எந்தவோர் உலக நோக்கத்திற்காகவும் இருந்ததல்ல; மாறாக, இறைவன் மீதான எல்லையற்ற நம்பிக்கையின் வெளிப்பாடே என்பது விளங்குகிறது. அன்னார் தமது சந்ததிகளைத் தமக்குப் பிறகு தம் பிரதிநிதியாக நியமிக்கவில்லை; மாறாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை நோக்கியே சுட்டிக்காட்டினார்கள். அன்னார் விரும்பியிருந்தால் முஸைலிமாவைப் பிடித்துக் கொன்றிருக்க முடியும்; ஏனெனில், அவன் மதீனாவில் அன்னாருடைய கட்டுப்பாட்டின்கீழ்தான் இருந்தான். ஆனால், இந்த விஷயத்திலும்கூட அன்னார் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைத்தார்கள்; அல்லாஹ்வே அந்தத் தீயவனை அழிப்பான் என்று நம்பினார்கள்."

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, இறைவன் மீதான நம்பிக்கையின் உயரிய முன்மாதிரியை நமக்குக் காட்டுகிறது; அதாவது, முழுமையாக இறைவன் பக்கம் சாய்வது, அவனது விருப்பத்திற்கு முன்னுரிமை அளிப்பது, உலக எதிர்ப்புகளினால் நிலைகுலைந்து போகாமல் இருப்பது, காரணிகளைப் பயன்படுத்திய பிறகு முடிவை அல்லாஹ்விடம் ஒப்படைப்பது மற்றும் எல்லா நிலையிலும் அவனது உதவியின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதே உண்மையான இறைநம்பிக்கை ஆகும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ إِنَّكَ حَمِيدٌ مَّجِيدٌ

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், மண்டி பஹாவுத்தீனைச்* منڈی بہاؤالدین *சேர்ந்த ஷஹீது மிர்ஸா ஸஃப்தர்* صفدر *மஹ்மூத் சாஹிப், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மகள் வழி பேத்தியான அன்பிற்குரிய அமத்துல் அஸீஸ் சாஹிபா மற்றும் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஓய்வுபெற்ற ஊழியரான மதிப்பிற்குரிய ரஷீத் அஹ்மத் அயாஸ் சாஹிப் ஆகிய மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களுக்கான ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைக்கப்போவதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)